மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
அ.வ.எண்.128/2017

பெயர் : பாபு
சாட்சி – வா.சா–2 நாள்: 04.06.2025

---

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (1 முதல் 3, 7 முதல் 11 பிரதிவாதிகள் தரப்பு)**

1) எனக்கு 49 வயது ஆகிறது. நான் ஆறாம் வகுப்பு வரை படித்துள்ளேன். இந்த வழக்கினை முதல் வாதியான இறந்து போன எனது அம்மா தான் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு தகவல்களை வழக்கறிஞரை அனுகி எனது அப்பாவும், அம்மாவும் தான் சொன்னார்கள். இந்த வழக்கின் வழக்குரை மற்றும் எதிர் வழக்குரை ஆகியவற்றை படித்துப் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். வழக்குரை மற்றும் எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மையானவை என்றால் சரிதான்.

2) ஆதியில் தாவா சொத்து ஒரு பேச்சியம்மாள் என்பவருக்கு 15.8.1922 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் படி பாத்தியப்பட்டது என்றால் சரிதான். பேச்சியம்மாள் சொத்தினை வாங்கும் போது காலி இடமாகத்தான் வாங்கி பின்னர் வீடு கட்டினார் என்றால் சரிதான். பேச்சியம்மாள் உயிருடன் இருக்கும் வரை அவர்தான் அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். பேச்சியம்மாள் சுமார் 53 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார் என்றால் சரிதான். பேச்சியம்மாளுக்கு பழனியம்மாள், பொன்னியம்மாள் மற்றும் நடராஜன் ஆகியோர் வாரிசு என்றால் சரியல்ல பழனியம்மாள் மற்றும் நடராஜன் ஆகியோர்தான் வாரிசுகள் ஆவர்.

3) பழனியம்மாள் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவர் எப்போது இறந்தார் என்று எனக்கு நினைவில் இல்லை. பழனியம்மாளுக்கு ஏழு பேர் வாரிசுகள் என்றால் இல்லை. தங்கவேல், ஆறுமுகம், ராமு மற்றும் சண்முகம் ஆகிய நான்கு பேர் தான் வாரிசுகள். அம்சம்மாள், ருக்குமணி மற்றும் சரஸ்வதி ஆகியோர் பழனியம்மாளின் மகள்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அம்சம்மாள், ருக்குமணி மற்றும் சரஸ்வதி ஆகிய மூவரையும் இந்த வழக்கில் ஏன் தரப்பினராக சேர்த்து உள்ளோம் என்றால் எனது அம்மா வழக்கு போடும்போது சேர்த்துள்ளார். என்ன அடிப்படையில் சேர்த்தார் என்று எனக்கு தெரியவில்லை.

4) பேச்சியம்மாளின் மகன் நடராஜ் என்றால் சரிதான். நடராஜ் 10.10.1978 தேதியில் இறந்துவிட்டார் என்றால் சரிதான். நடராஜன் என்பதற்கு ராமராஜ், பழனிச்சாமி, கோபால், பங்காரம்மாள், துளசி அம்மாள் ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். ராமராஜன் என்பவர் எனது தந்தை என்றால் சரிதான். அவர் ஆறு வருடங்களுக்கு முன்பு இறந்து விட்டார். அவருக்கு வாதிகளாகிய நாங்கள் மூவர் மட்டும்தான் வாரிசுகள். எனது தந்தையின் சகோதரர் பழனிச்சாமி 11 வது பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான்.

5) எனது தந்தையின் சகோதரர் கோபால் என்பவர் சுமார் 40 வருடங்களுக்கு முன்பு இறந்து விட்டார் என்றால் சரிதான். கோபால் என்பவருக்கு சரோஜா என்ற மனைவியும் பன்னீர்செல்வம் என்ற மகனும், பாரதி என்ற மகளும் உள்ளார்கள் என்றால் சரிதான். கோபாலின் வாரிசுகள் யாரும் இந்த வழக்கில் சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான்.

6) எனது தந்தையின் சகோதரி பங்காரு அம்மாள் தற்போதும் உயிருடன் உள்ளார் என்றால் சரிதான். அவரையும் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனது தந்தையின் மற்றொரு சகோதரி துளசி அம்மாள் இறந்துவிட்டார் என்றால் சரிதான். துளசியம்மாளுக்கு மணிகண்டன், குமார் மற்றும் லதா என்ற மூன்று வாரிசுகள் உள்ளார்கள் என்றால் சரிதான். அவர்களையும் இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

7) பேச்சியம்மாளுக்கு பொன்னியம்மாள் என்ற ஒரு மகள் இருந்தார் என்றும் அவரை வேண்டுமென்று நாங்கள் இல்லை என்று மறுக்கிறோம் என்றால் சரியல்ல. பொன்னியம்மாள் தற்போது இறந்து விட்டார் என்றும் அவருக்கு பொன்னுசாமி என்ற மகன் இருந்தார் என்றும் அவரும் தற்போது இறந்து விட்டார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

8) பேச்சியம்மாளின் பேரன் பொன்னுச்சாமி என்பவர் உயிருடன் இருந்தபோது கடந்த 02.04. 1992 தேதியில் தனது மகள் வழி பேத்தியான நாகரத்தினம் என்பவருக்கு தாவா சொத்தில் 1/3 பங்கை பொறுத்து ஒரு உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த உயிலின்படி நாகரத்தினமும் அவரது பெற்றோரான 11 வது பிரதிவாதி பழனிச்சாமி மற்றும் அவரது மனைவி வசந்தாமணி, பழனிச்சாமியின் மகன்கள் ஆகியோர் கூட்டாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. பழனிச்சாமி மட்டும் ராமராஜ் வகையில் அனுபவித்து வருகிறார். பழனிச்சாமியின் மனைவி வசந்தாமணி என்பவர் பொன்னுசாமியின் மகள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

9) நாகரத்தினத்தை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் அவருக்கு இந்த பங்கும் கிடையாது என்பதால் சேர்க்கவில்லை. பழனியம்மாள் என்கிற வீரம்மாள் என்பவரின் வாரிசுகளான சண்முகம், தங்கவேல், ஆறுமுகம், ராமு, அம்சம்மாள், ருக்குமணி, சரஸ்வதி ஆகியோர் சேர்ந்து தாவாசொத்தில் 3 ல் 1 பங்கை பொறுத்து 03.04.2006 தேதியில் மணிகண்டன் என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்து விட்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

10) மணிகண்டன் தாவா சொத்தில் வசித்து வருகிறார் என்றால் எல்லாரும் சேர்ந்து தான் அனுபவித்து வருகிறோம். நாங்கள் அனைவரும் கூட்டுக் குடும்பமாக அனுபவித்து வருகிறோம் என்றால் இல்லை தனித்தனியாக தனிக்குடித்தனம் இருந்து வருகிறோம். அந்த வகையில் மணிகண்டன் வடகோட்டில் தனிகுடித்தனம் உள்ளார் என்றால் சரிதான்.

11) பேச்சியம்மாளின் மகன் நடராஜன் 3 ல் 1 பங்கு பாகமானது அவரது வாரிசுகள் அனைவருக்கும் இந்து வாரிசுரிமை சட்டத்தின் அடிப்படையில் சம உரிமை உள்ளது என்றால் சரியல்ல. நடராஜன் எழுதி வைத்த ஆவணத்தின் படி ராமராஜ் மற்றும் பழனிச்சாமி ஆகியோருக்கு மட்டும் சேரும். நடராஜன் என்ன ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்று எனக்கு தெரியாது. நடராஜன் எழுதி வைத்த ஆவணத்தின் படி ராமராஜ் மற்றும் பழனிச்சாமி ஆகிய இருவருக்கு மட்டும் தான் நடராஜனின் பங்கு சேரும் என்று எங்களது வழக்குரை மற்றும் எனது முதல் விசாரணை சாட்சியத்தில் சொல்லி உள்ளோமா என்றால் சொல்லியுள்ளோம். நான் சொல்வது போல் வழக்குரையிலோ முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றும் தற்போது தான் முதல் முறையாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

12) பட்டாவானது பழனியம்மாள், ராமராஜ், மற்றும் பழனிச்சாமி ஆகியோர் பெயரில் உள்ளது. நான் சொல்லும் பட்டா எப்போது வழங்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. உண்மை நிலவரத்தை மறைத்து வருவாய்த்துறையில் பட்டா பெற்றுள்ளார்கள் என்று மற்ற வாரிசுகள் ஆட்சேபனை தெரிவித்து மனு அளித்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் இந்த வழக்கில் பேச்சியம்மாளின் வாரிசுகள் அனைவரையும் இந்த வழக்கில் சேர்க்காததால் இந்த வழக்கு நிலக்கத்தக்க தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

13) நான் தாவாசத்தில் சுவாதீனம் மற்றும் அனுபவத்தில் இருந்து வருகிறேன் என்று காண்பிப்பதற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. என்னுடைய மற்றும் எனது பெற்றோருடைய ஆதார், குடும்ப அட்டை உள்ளிட்ட அடையாள ஆவணங்கள் அனைத்தும் அண்ணா நகர்

முகவரியில் தான் உள்ளது என்றால் சரிதான். நான் தாவாசத்தில் குடியிருந்து வருவதாக சொல்வது வழக்குக்காக சொல்லும் பொய் என்றால் சரியல்ல.

14) தாவா சொத்து 893 சதுர அடி பரப்பளவு கொண்ட இடம் என்றால் சரிதான். தாவச் சொத்து தென்புறம் மற்றும் வடபுறம் என இரண்டு பகுதிகளாக உள்ளது என்றால் சரிதான். தென்புறம் உள்ள பகுதியில் எனது சித்தப்பா பழனிச்சாமி மற்றும் அவரது குடும்பத்தினர் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தின் வடபுறம் உள்ள பகுதியில் மணிகண்டன் வசித்து வருகிறார் என்றால் சரிதான். நான் மையப்பகுதியில் வசித்து வருகிறேன். நான் மையப் பகுதியில் வசித்து வரவில்லை என்றும் மையப்பகுதியில் வசித்து வருவதாக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் அனுபவித்து வருவதாக சொல்வது அவ்வபோது வந்து கொண்டும் சென்று கொண்டும் இருப்பேன்.

15) தாவா சொத்திற்கு நான் எப்போதாவது வரி செலுத்தி உள்ளேனா என்றால் பிரித்துக் கொடுத்தால் தான் வரி செலுத்த முடியும். நான் எந்த காலத்திலும் தாவாசத்தில் தனியாகவோ கூட்டாகவோ சுவாதீனத்தில் இருந்ததில்லை என்றால் சரியல்ல. தாவாச் சொத்திற்கு தென் புறப்பகுதிக்கு பழனிச்சாமி தனியாக மின் இணைப்பு, தண்ணீர் இணைப்பு ஆகியவை வாங்கியுள்ளார் என்றால் சரிதான். வட புறப்பகுதிக்கு மணிகண்டன் தனியாக மின் இணைப்பு, தண்ணீர் இணைப்பு ஆகியவை வாங்கியுள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு உண்டான வீட்டு வரி, மின்கட்டணம், தண்ணீர் கட்டணம் ஆகியவற்றை மேற்படி மணிகண்டன் மற்றும் பழனிச்சாமி ஆகியோர் தான் செலுத்தி வருகிறார்கள் என்றால் அவரவர் பகுதிக்கு செலுத்தி வருகிறார்கள்.

16) இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக கடந்த 11.03.2017 தேதியில் எனது தந்தை பாகம் கேட்டு வழக்கறிஞர் சக்திவேல் என்பவர் மூலமாக அறிவிப்பு அனுப்பி உள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி அறிவிப்பிற்கு கடந்த 23.03.2017 தேதியில் 11 ஆம் பிரதிவாதி மற்றும் அவரது குடும்பத்தினர் பதிலறிப்பு அனுப்பியுள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பதிலறிவிப்புக்கு பின்பு 20.06.2017 தேதியில் எனது அம்மாவின் பெயருக்கு எனது அப்பா இந்த வழக்கினை தாக்கல் செய்வதற்காக பொய்யாக ஒரு செட்டில்மெண்ட் ஆவணத்தை உருவாக்கியுள்ளார் என்றால் சரியல்ல.

17) இந்த வழக்கில் ஏழாம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ள மணி என்பவர் வடகோட்டில் வசித்து வரும் சண்முகம் என்பவரின் மகன் என்றால் சரிதான். எங்களுக்கு எந்த வகையில் 3ல் 1 பங்கு வரும் என்று வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லி உள்ளோம். எந்த அடிப்படையில் தாவா

சொத்தில் எங்களுக்கு பங்கு கேட்கிறேன் என்றால் நடராஜன் வாரிசுகள் என்ற அடிப்படையில் கேட்கிறோம். நடராஜனுக்கு சொத்து பேச்சியம்மாளின் மகன் என்ற அடிப்படையில் வாரிசு உரிமை அடிப்படையில் வந்தது என்றால் சரிதான்.

18) நத்தம் பட்டாவின் அடிப்படையில் நாங்கள் பாகம் கேட்பது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனக்கு தாவா சொத்து பற்றிய எந்த விபரமும் தெரியாது என்றால் சரியல்ல. எனது தாயார் இந்த வழக்கினை தாக்கல் செய்யும்போது உண்மைகளையும், ஆவணங்களையும், வாரிசுகளையும் மறைத்து இந்த வாழ்க்கை தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2025.06.04 18:15:18 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.